செ.வெ.எண்: 19 / ஜூலை நாள் : 10.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## திறன் பயிற்சியில் சேர விரும்பும் இளைஞர்களின் விபரங்களை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக "Web Portal"-இல் பதிவு செய்யும் பணியினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (10.07.2017) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் ஆகியவற்றின் சார்பில், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இளைஞர்களிடையே வேலைவாய்ப்பு திறன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் திறன் விழிப்புணர்வு மற்றும் திறன் பயிற்சிக்கான பதிவு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இளைஞர்களிடையே வேலைவாய்ப்பு திறன் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் உலக இளைஞர் தினம் ஜூலை 15-ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. அதிக மக்கட் தொகை கொண்ட மனித வளமிக்க இந்தியா 2020-ஆம் ஆண்டிற்குள் "திறன்மிகு இந்தியா" ஆக மாற அனைத்து மக்களுக்கும் திறன் பயிற்சியின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் அறிந்து கொள்ளும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகியவற்றின் சார்பாக (இன்று) 10.07.2017 முதல் 15.07.2017 வரை 6 நாட்கள் "திறன் வார விழா"-ஆக கொண்டாடப்படுகிறது.

மனிதவளமிக்க இந்தியா தொழில் திறன்மிகு இந்தியாவாகவும், பொருளாதாரத்தில் தன்னிறைவடையும் பொருட்டு, இந்தியா எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையவும் முதல் முயற்சியாக இத்திறன் வார விழா கொண்டாடப்படுகிறது.

அதனடிப்படையில் திறன் வார விழாவின் முதல் நாளான இன்று இளைஞர்களிடையே திறன் பயிற்சியியை ஊக்குவித்திடும் விதமாக திறன்பயிற்சிகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக Web Portal-இல் திறன் பயிற்சியில் சேர விரும்பும் இளைஞர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், மாவட்டத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களிலும், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் பதிவு செய்யப்பட்டு வருகிறது. எனவே இளைஞர்கள் இத்திறன் பயிற்சியில் பதிவு செய்து , தங்கள் திறனை வளர்த்துக் கொண்டு சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் முன்னேற்றமடைவதற்கு உறுதுணை புரியவேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை உதவி இயக்குநர் திரு.அபுபக்கர் சித்திக், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.தங்கவேல் உள்பட அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள், அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**